# தேசிய சமாதான தினம்

## 2003 பெப்ரவரி 22

ஒரே தேசம் — ஒரே இனமாக
சமாதானத்துடனும் சகோதரத்துவத்துடனும்
சுதந்திரமாக வாழ்வதற்கு...

பேராசிரியர் எச். ஓ. ஏ. டி சொய்சா



# தேசிய சமாதான தினம்

# 2003 பெப்ரவரி 22

ஒரே தேசம் – ஒரே இனமாக

சமாதானத்துடனும் சகோதரத்துவத்துடனும்

சுதந்திரமாக வாழ்வதற்கு . . .

பேராசிரியர் எச்.ஓ.ஏ. டி சொய்சா

# சமாதானத்தின் உறுதியுரை

இலங்கைத் தாய்திருநாட்டின் பிரஜைகளாகிய நாம் அனைவரும்

நாட்டின் இனங்களுக்கிடையே உண்மையான இன ஒற்றுமை

சமாதானம்

சகோதரத்துவம்

உருவாவதற்கான உன்னத அபிலாசையுடன்

அனைத்துவிதமான குல,

கோத்திர, இன வேறுபாடின்றி

சமத்துவத்துடனும் ஒற்றுமையுடனும்

ஒன்றிணைந்து செயற்பட்டு

சமாதானம் எனும் உன்னதக் கனவினை யதார்த்தமாக்கும் வரை

வலுவான எதிர்ப்பாப்புடனும் உறுதியுடனும் செற்பாடுவேனென

இலங்கைத் தாய்க்கு

விநயத்துடன் உறுதியுரைகின்றேன்.

"இனவாதத்தின் வன்செயல் பல முகங்களைக் கொண்ட மிருகமாகும்.

இறுதியில் அது அனைவரையும் அழித்தொழித்துவிடும்.

அவ்வாறு ஏற்படும் அழிவுகளுக்கு இனவாதத்தின் பொறுப்பாளிகள்

அனைவரும் உள்ளாக்கப்படுவர்."

– மகாத்மா காந்தி –

## நாம் முகங்கொடுத்துள்ள அவலம்

- ❑ 150 வருட காலமாக பிரித்தானியரின் குடியேற்ற நாடாக இருந்த இலங்கை சுதந்திரமான தன்னாதிக்கமுடைய தேசமாக 1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் திகதி விடுதலையடைந்தது.

- ❑ இன்று வரை இலங்கை சுதந்திரமான தேசமாக 55 ஆண்டுகளை கடந்துள்ளது.

- ❑ விடுதலை பெற்றதிலிருந்து ஐம்பத்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் நாம் ஈட்டிக் கொண்டவைகள் எவை?

  - பிளவுபட்டு ஒருவரோடொருவர் சண்டைமிடுகின்ற இனம் என்பதும்,
  - சீரழிந்தொழிந்த பொருளாதாரமும்,
  - முரண்பாடுகள் நிறைந்த அரசியல் முறையொன்றும்,
  - விழுமியங்கள் அற்ற மனித சமுதாயத்தையும் தான்.

- ❑ இந்த பிரச்சினைக்கு காரணிகளாக அமைந்துள்ளவை எவை?

  1. பொதுவான தேசியத்தினை கட்டியெழுப்ப முடியாதிருந்தமை.
  2. பொதுவான கருத்தினை உடைய பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைக்கு அமைய தேசத்தினை ஆட்சி செய்யாமை.

- ❑ இந்த கொடூர நிலையிலிருந்து எவ்வாறு மீள்வது?

அ. பொதுவான தேசியத்தினை கட்டியெழுப்புவதன் மூலம் – அதாவது, ஒரு நாடு – ஒரே தேசியம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் இந் நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சிறு பான்மையினர் உட்பட அனைவருக்கும் சமாதானத்துடனும், மகிழ்ச்சியுடனும் சகோதரத்துவத்துடனும் ஒன்றுபட்டு வாழக்கூடிய பொதுவான தேசத்தினை கட்டியெழுப்புதலாகும்.

ஆ. நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் முறையினை முன் கொண்டு செல்வதற்கு பொதுவான கருதுகோளின் அடிப்படையில் பொருளாதார மற்றும் அரசியல் கொள்கையினை வகுத்துக்கொள்ளல்.

❑ ஒரே நாட்டினுள் வாழும் மனிதர்களாகிய நாம் , மதத்தாலும், மொழியாலும் பிரிந்து சென்று சந்தேகத்துடனும், கொடுரத்துடனும், கோபத்துடனும், பயத்துடனும் காலத்தினை கடத்தி தொடர்ந்தும் சண்டையிடுவதா? ஒவ்வொருவரை அழித்துக் கொள்வோமா? அவ்வாறானதோர் மானித சமுதாயத்திற்கு திடமான பொருளாதார அரசியல் மற்றும் சமூக முன்னேற்த்தினை ஈட்டிக் கொள்வதற்கு எப்போதுமே இயல்வதில்லை.

❑ ஆதலினால், தனித்துவத்தினை பேணி பாதுகாக்கும் பரஸ்பர நட்புறவுடைய பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டின் பொருதளாதார, அரசியல் மற்றும் சமூக முன்னேற்றம் போன்ற காரணிகளுக்கு முக்கிய அடித்தளமாக அமைவது ஒற்றுமையாகும். அதாவது தேசத்தவராக ஒன்றுபட்டு வாழுதலாகும். திருத்தமாகக் கூறின் பொதுவானதோர் தேசியத்துவத்தை கட்டியெழுப்பிக் கொள்ளலாகும். இதனை எமது நாட்டுக்குப் பொருந்துமாறு கூறினால் – இலங்கையினையும் இலங்கையர்களையும் உருவாக்கிக் கொள்ளலாகும்.

❑ இதுதான் நாம் இன்று முகங்கொடுத்துள்ள பிரதான சவால். நாம் முன்னேறிச் செல்வதா அல்லது சீரழிந்து விடுவதா என்பதனை நிர்ணையிப்பது இத் தேசிய சவாலுக்கு முகங் கொடுத்து அதனை வெற்றி கொள்ளும் விதத்திலாகும்.

## எமக்கு பொதுவான தேசியத்துவத்தைக் கட்டியெழுப்ப முடியாதிருந்தமைக்கான காரணம் என்ன ?

❑ பல்லின மக்கள் வாழும் நாடொன்றில் ஒரு நாடு – ஒரு தேசியம் எனும் கோட்பாடுகளின் அடிப்படையில் பொதுவான தேசியத்துவத்தை ஈட்டிக் கொள்வதற்கு அத்தியவசியமாக கடைப்பிடிக்க வேண்டிய இரண்டு முக்கிய உடன்படிக்கைகள் உள்ளன.

1. அரசு பக்கச்சார்பற்ற தீர்ப்பாளராக செயற்படல்
2. சாதாரண பிரஜைகள் – சமமான வாய்ப்புக்கள் என்ற அடிப்படையில் நாட்டில் வாழும் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்கல்.

- இதன் முதலாவது உடன்படிக்கையின் மூலம் கூறப்படுவது யாதெனில் அரசுடமையாக்கப்பட்ட சகல சமுதாயத்தவரும் அரசானது பொது பாதுகாப்பாளனாகவும், பொறுப்பாளியாகவும், வழிகாட்டியாகவும் ஊக்குவிப்பாளியாகவும் செயற்படல் வேண்டும் என்பதாகும். இதற்காக அரசானது இன வர்க்கத்தினை அடிப்படையாகவும் மதத்தினை அடிப்படையாகவும் மொழியினை அடிப்படையாகவும் கொண்டு விசேட கவனிப்பினை வழங்கலானது அத்தியவசியமானதாகும். வேறு விதமாகக் கூறினால் அரசானது முதன்மையானது என்னும் கோட்பாட்டுடன் செயற்படுதலாகும்.

- "எனது நாடு", "எமது நாடு""எமது தாய் நாடு""எமது தேசம்", "தாயகம்", என்றவாறு தேசியத்துவம் உணரும் வித்தில் "உள்ளார்ந்த அரசியல் கோட்பாடுகள்" *(Political Pschycological Concepts)* மக்களின் மனதில் பதிவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட வித்தில் அரசானது பக்கச்சார்பற்ற தீர்ப்பாளராக செயற்பட்டால் மாத்திரமே நிகழக்கூடும்

- இரண்டாவது உடன்படிக்கையின் மூலம் கூறப்படுவது இன, மத, மொழி, பிரதேசம் எனும் எந்தவொரு காரணியினையும் கருதாமல் நாட்டில் வாழும் அனைத்து பிரஜைகளும் சமமான அந்ஸ்துடையவர்கள் எனக் கருதி சமமாக மதித்தலென்பதாகும்.

- ஓர் இனத்திற்கு நாம் அனைவரும் உள்ளடங்குகின்றோம் எனும் மன நிலையினை அனைவரது மனங்களிலும் துளிர்விட்டு மலர்வதற்கும், அதன் மூலம் தேசப் பற்று, தேச பக்தி, மாண்பு, போன்வை மேலோங்குவதற்கான காரணிகளாக அரசியல் சார்ந்த உள நிலைகள் மேம்படுதல் தொடர்பாக சமமான வாய்ப்புக்கள் சமமான அந்தஸ்து போன்ற கோட்பாடுகள் செல்வாக்குச் செலுத்தும்.

- விடுதலையின் பின்னர் கடந்த 55 ஆண்டுகால வரலாறு பற்றி ஆராயும்போது மேற் குறிப்பிடப்பட்ட இரண்டு காரணிகளும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம் தவறியுள்ளோம் என்பது நன்கு புலப்படுகின்றது.

- இவ்வாறு தவறியமைக்கான காரணிகள் எவை? என்பது பற்றி நாம் சிறிது எமது கவனத்தினை செலுத்துவோம்.

- இது தொடர்பாக ஆராய்கையில் முகியமாக இலங்கை சன சமூகமானது எவ்வாறாக அமையப் பெற்றுள்ளது என்பதனைப் பற்றி தெளிவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

இலங்கை சன சமூகமானது பல்லின மக்களைக் கொண்ட சன சமூகம் என்பதனை நான் இதற்கு முன்னர் குறிப்பிட்டேன். அதன் அமைவு கீழே உள்ளவாளாகும்.

| இனம் | சனத்தொகையின் நூற்றுவீதமாக |
| --- | --- |
| சிங்கள | 74.0 |
| தமிழ் | 18.2 |
| முஸ்லிம் | 7.1 |
| பர்கர் | 0.3 |
| மலே | 0.3 |
| பிற | 0.1 |

தகவல்: 1981 தொகை மதிப்பு

மதத்திற்கு ஏற்ப சனத்தொகை பிரிந்துள்ள விதம்

| மதம் | சனத்தொகையின் நூற்றுவீதமாக |
| --- | --- |
| பௌத்தர் | 69.3 |
| இந்துக்கள் | 15.5 |
| முஸ்லிம் | 7.6 |
| கிறிஸ்தவர் | 7.5 |
| ஏனையோர் | 0.1 |

தகவல்: 1981 தொகை மதிப்பு

- இக் குறிப்புக்களினால் காட்டப்பட்டுள்ளவித்தில் இலங்கை சன சமூகம் பல் இன மக்கள் கொண்டதாக அமைந்தவிடத்தும், சிங்கள – பௌத்த சனத்தொகையானது மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 3/4 பங்கினராவர்.

- வரலாற்று ரீதியில் காணக்கூடிய இயல்பாக அமைவது இலங்கை சன சமூகத்தில் வாழும் சிங்கள – பௌத்தர்களான பெரும்பான்மையினர் தொடர்பாக தமிழ் சன சமூகம் சந்தேகத்துடனும் பயத்துடனும் நோக்குதலாகும்.

- தமிழ் மக்களின் மனங்களில் வேரூன்றியுள்ள இந்த பயமும் சந்தேகமும் காரணமாக அரசியல் அதிகாரத்தினை பிரயோகிப்பதற்கு தமக்கும் சமமாக பங்குகொள்வதற்கு வாய்ப்புக்கள் கோரி மற்றும் அக் கோரிக்கைகள் கேட்டவாறு நிறைவேறாததினால் அண்மைக்கால சிங்கள – தமிழ் பிரிவினவாதம் ஆரம்பமாகி அது பிரத்தியேகமான அரசினை கோரிக்கையாகக் கொண்ட ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி பெற்றது.

- இப் பிரிவினவாதமானது 1911ம் ஆண்டு அரசியல் யாப்பு சீர்த்திருத்தத்துடன் மேல் மாகாண தமிழ் மக்களுக்கு பிரத்தியேகமான தொகுதியினை கோரிய சந்தர்ப்பத்தில் அதற்கு தெற்கிலுள்ள தலைவர்கள் ஆதரவு அளிக்காததால் ஆரம்பமானதாகும்.

- அதன் பின்னர் நட்புறவு இழந்து தமிழ் சன சமூகம் தமது அந்தஸ்துக்களுக்கான கோரிக்கைகள் அதிகரித்தமையும் காண முடிகின்றது.

- உதாரணமாகக் கொண்டால் 1920களில் 3:1 என்ற வீதாசாரமும் 3:2 என்ற வீதாசாரமும் அதன் பின்னர் 50:50 என்ற வீதாசாரத்தின் கீழும் தமக்கு பிரத்திநிதித்துவத்தினை கோரும் தமிழ் மக்கள், சுதந்திரத்தின் பின்னர் பிரதேச ரீதியாக பாரிய அதிகாரத்தினை பன்முகப்படுத்தலும், அதன் பின்னர் கூட்டாட்சி அரசியல் முறை மற்றும் 1974 பின்னர் தனித்துவமான ஈழம் வரை மேம்பாடடைந்தமை காண முடிந்தது.

- சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலங்களில் சிங்கள – தமிழ் பிரிவினவாதத்தை தணித்து தேசிய ஒற்றுமையினை ஈட்டுவதற்கு தென் பகுதி சிங்களத் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் காண்பிக்க முடியும்.

  1. பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் 1957
  2. டட்லி சேநாநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் 1965

- என்றாலும் இத் தீர்வுகள் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமை ஏற்பட்டதுடன் அதன் பயனாக பிரத்தியேகமான ஈழத்தினை பெற்றுக் கொள்ளும் ஆயுதப்போராட்டத்திற்கு தள்ளப்பட்டனர்.

- ஏறத்தாழ இரண்டு தசாப்த காலமாக நடைபெற்ற இந்த யுத்தத்திற்கு தீர்வுகளை கொண்டுவரும் பொருட்டு 1980ல் இருந்து இதுவரை பல சனாதிபதிகள் *LTTE* அமைப்புடன் கலந்துரையாடி பல தீர்வுகளை அதாவது, 1987 மாகாண சபை முறை, 1999 அரசியல் பக்கேஜ் போன்றவை முன்வைத்த போதும் அவை பயனற்றுப் போனதுடன் யுத்தமானது தொடர்ந்தும் நீடித்தது.

- இந்த யுத்தம் எவ்வளவு பயங்கரமானது என்பது யுத்த செலவினைக் கருத்திற்கொள்ளும் போது தென்படுகின்றது.

## இனப்பிரச்சினையின் செலவினம்

இருபது ஆண்டு காலமாக நடைபெற்ற யுத்தத்தினால் சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் ஏற்பட்ட செலவினம் போன்றவற்றினை கணக்கிடுதலானது சாதாரணமான விடயமல்ல. ஏனெனில் யுத்தத்தினால் இழந்த பொருளாதாரம் பற்றிய செலவினங்களை கடினமாக கணக்கிட்டாலும் சமூக ரீதியில் ஏற்பட்டுள்ள விழுமியங்களின் சீரழிவு பற்றி அவ்வாறு கணக்கிட முடியாது என்பதனாலாகும்.

1982 இருந்து 1983 வரை இலங்கை இராணுவப் படையினருக்கு மொத்த தேசிய உற்பத்தியில் 0.5% இருந்து 0.8% வரையிலேயே செலவிடப்பட்டது. பொதுவாக யுத்தப் பிணக்குகள் அற்ற நாடொன்றில் இச் செலவுகள் மொத்த தேசிய உற்பத்தியில் 1.5% வரையான உச்ச எல்லையைக் கொண்டமைகின்றன. இதற்கு மேற்பட்ட செலவுகள் யுத்தத்திற்கான மேலதிகச் செலவாக கருத முடியும். இதற்கேற்ப 1985 – 2001 வரை இலங்கை அரசு யுத்தத்திற்காக செலவிட்ட மேலதிக செலவு ஏறத்தாழ 372.78 பில்லியன் ரூபாவாகும்.

| ஆண்டு | பாதுகாப்புச் செலவினம் (ரூபா பில்லியன்) |
|---|---|
| 1982 | 0.48 |
| 1983 | 0.98 |
| 1984 | 1.27 |
| 1985 | 4.61 |
| 1986 | 4.35 |
| 1987 | 6.00 |
| 1988 | 4.89 |
| 1999 | 4.12 |
| 1990 | 6.91 |
| 1991 | 10.61 |

| ஆண்டு | பாதுகாப்புச் செலவினம் (ரூபா பில்லியன்) |
|---|---|
| 1992 | 13.23 |
| 1993 | 15.41 |
| 1994 | 19.41 |
| 1995 | 35.18 |
| 1996 | 38.11 |
| 1997 | 37.06 |
| 1998 | 42.49 |
| 1999 | 40.67 |
| 2000 | 56.91 |
| 2001 | 54.24 |
| மொத்தம் | 396.93 |

அதேபோன்று யுத்தத்தினால் ஏற்பட்ட விடே சட்டங்கள், சமாதானத்தினை பேணல் போன்ற நடவடிக்கைகள் மேம்பட்டுள்ளன. அதாவது பயங்கரவாக கண்காணிப்புக்காக அரசியல்வாதிகளுக்கும் உயர் உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்பினை அளிக்கும் பொருட்டும் கூட்டான வன்செயல்களை தடுப்பதற்கும் 1983 – 2001 வரை ரூபா 63 பில்லியன்கள் மேலதிக செலவினை தாங்க வேண்டியிருந்தது.

யுத்தத்திற்காக *LTTE* அமைப்பினால் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட பாரிய நிதியினை செலவளித்துள்ளார்கள். இது அரசாங்கத்தினால் செலவு செய்த நிதியில் 20% மாகக் கணக்கிட்டால் மொத்த காலப் பகுதிக்குமாக அது 74.55 பில்லியன் ரூபாவாக கணக்கிட முடியும். அதன் உண்மையான பெறுமதி இதனையும் விட அதிகரிக்க வாய்ப்பு உண்டு. இதற்கேற்ப இந்தியாவானது தமது சமாதானப் படைக்காக செலவிட்ட செலவினைத் தவிர யுத்தத்தில் ஈடுபட்ட இரு சாராரினாலும் 2001ம் ஆண்டாகும்போது ரூபா 510 பில்லியன் இப் பயங்கரமான யுத்தத்திற்காக செலவிட்டுள்ளனர்.

யுத்தினால் வடக்கில் அடிப்படை வசதிகள் முற்று முழுதாகவும், கிழக்கில் குறிப்பிடத்தக்களவும் சேதமடைந்துள்ளன. அவை சேதமடைந்ததனால் இழந்த பெறுமதி மற்றும் மறு சீரமைத்தல் பற்றிய செலவினையும் கருத்தில் கொள்ளல் அத்தியவசியமானதாகும். அதுமட்டுமின்றி கொழும்பு மற்றும் அண்டிய பிரதேசங்களில் குண்டு வெடிப்புக்களினால் ஏற்பட்ட சேதங்களையும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

| மறுசீரமைப்பு புனர்நிர்மாணச் செலவு | 2001 நாணயப் பெறுமதிக்கு அமைய ரூபா பில்லியன் |
|---|---|
| *1987–1998* வ.கி. சொத்துக்களின் சேதம் | 166.9 |
| *1998–2001* வ.கி. சொத்துக்களின் சேதம் | 31.3 |
| *1995* வரை வ.கி., வெளிப்பிரதேசங்களின் சேதம் | 5.7 |
| *1996–2001* வ. கி., வெளிப்பிரதேசங்களின் சேதம் | 27.0 |
| மொத்த சொத்துக்களின் இழப்பு *1983–1998* | 172.6 |

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1994 | 524,000 |
| 1996 | 1,017,000 |
| 1997–1998 | 670,000 |

இவ் அனைத்தையும் கருத்திற் கொள்கையில் 2001 நாணயப் பெறுமதிக்கு ஏற்ப இவ் அடிப்படை வசதிகளுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் அவற்றினை மறுசீரமைப்பதற்கு ஏற்படும் செலவு ரூபா 172.06 பில்லியனாகும். 1983–1987 வரையான காலத்தினுள் இதன் காரணமாக 56000 வீடுகள் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளதுடன் 34000 ஆவை சேதமடைந்துள்ளதாக பொது மக்கள் மற்றும் தனிப்பட்ட சொத்து இழப்பு பற்றிய தேசிய செயற்பாட்டு செயலணி அறிவித்துள்ளது. இக் கணக்கில் யுத்தத்தினால் சுற்றாடலுக்கு ஏற்பட்ட இழப்பு உள்ளடக்கப்படவில்லை என்பதுடன், அது இதனையும் விட மேல் நிலையில் காணப்படக்கூடும்.

இவ் யுத்தத்தினால் இடம்பெயர்ந்தோரின் பிரச்சினையும் பாரியதொன்றாகும்.

## இனப் பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்தோர்

இவ்வாறு இடம் பெயர்ந்தோருக்காக 2001ம் ஆண்டு வரை ஏறத்தாழ ரூபா 106 பில்லியன் செலவிடப்பட்டுள்ளன. யுத்தத்தினால் இறந்தோருக்கு நட்டவீடு வழங்கல் மற்றும் காயமடைந்தோருக்கு நட்டவீடு வழங்குவதற்கு ரூபா 378 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன.

இதற்கேற்ப நாட்டின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்தக்கூடிய நிதி மரணத்திற்காகவும் சேதத்திற்காகவும் வீணாக செலவாக்கப்பட்டுள்ளது என்பது தெரிகின்றது.

1982 இல் அம்பாறை தவிர்ந்த வடக்கு கிழக்கின் ஏனைய பிரதேசங்களில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 94.97 பில்லியன் ஆனதுடன், யுத்தம் நிகழவில்லையெனில் அது மேலும் ரூபா 9.18 மில்லியன்களால் அதிகரித்திருக்கும் என கருதப்படுகின்றது. 1982 உடன் ஒப்பிடும் போது 2000 அண்டில் வடக்கின் விவசாய உற்பத்தி குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது. உருளைக்கிழங்கு உற்பத்தி 92% இனாலும், வெங்காய உற்பத்தி 54% இனாலும், மீன்பிடி 57% இனாலும் வீழ்ச்சியடைந்திருந்தது. யுத்தம் காரணமாக சுற்றுலாத் துறையானது பாரிய வீழ்ச்சிக்கு இலக்கானதுடன், வடக்கு கிழக்கில் இருந்த அரச உற்பத்தித் துறைகள் போன்று சவற்காரம், எண்ணை, அய்ஸ் போன்ற கைத்தொழில்களும் ஸ்தம்பிதமடைந்தன. வடக்கு கிழக்கில் கைத்தொழில் உற்பத்தியில் வீழ்ச்சியானது 80% மாகும். 1982/83 ஒப்பிடும் போது வடக்கு கிழக்கின் உற்பத்தி சராசரியாக 40% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.

யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு இவ்வாறாக கணக்கிட முடிந்தாலும் அதனால் ஏற்பட்ட மனுட வேதனைகளை இலகுவில் மதிப்பிட முடிவதில்லை. 2000 வரை யுத்தத்தினால் இறந்தோரின் எண்ணிக்கை 60,000–80,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 2000 ஆண்டு ஆகும் போது யுத்தத்தினால் இறந்த சிவிலியன்களின் எண்ணிக்கை 22500 ஆக காட்டப்பட்டுள்ளது. யுத்தினால் அங்கவீனமடைந்தோர் பற்றி சரியான தகவல்கள் இல்லை என்பதுடன், யாழ்ப்பாணத்தில் மட்டும் அனாதையானோரின் எண்ணிக்கை 20000 ஆக இருக்கும் என மதிப்பிடப்படுகின்றது. யுத்தின் தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள குழந்தைகள் பற்றி கருத்திற்கொள்கையில் அது உச்ச நிலையினைக் கொண்டது என கருதப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் மட்டும் பெற்றோர், தாய் அல்லது தந்தை இழந்தோரின் எண்ணிக்கை ஏறத்தாழ 13,500 ஆகும்.

யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவுகள் சுமூகமான சூழ்நிலைகளின் கீழ் மிக விரைவாக தீர்க்க முடிந்தால், இக் காரணிகளினால் எழுந்த சமூக மற்றும் மானுட பிச்சினைகள் தீர்ப்பதற்கு அரசிற்கும் அரச சார்பற்ற அமைப்புக்களும் சிவில் சமுதாயத்தினருக்கும தூர நோக்குடன் செயற்பட வேண்டியிருக்கும். ஏனெனில் யுத்தினால் ஏற்பட்ட இப் பிரச்சினைகள் சமாதானத்தின் மூலமாகவேனும் குறுகிய காலத்தில் தீர்த்துக் கொள்வதற்கு முடியாத அவலங்களாக காணப்படுவதனாலாகும்.

# புரிந்துணர்வு உடன்படிக்கையும் சமாதானமும்

❑ 2002 டிசெம்பர் மாதம் 05ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி கொண்டு அரசாங்கத்தினை அமைக்கையில் இனப் பிரச்சினை தொடரபாக கடைப்பிடிக்க வேண்டியிருந்த மாற்று கொள்கைகள் இரண்டு காணப்பட்டன.

1. யுத்தத்தினை தொடர்ந்தும் கொண்டு செல்லல்
2. கலந்துரையாடலின் மூலம் அரசியல் தீர்வினைக் காணல்

❑ யுத்தத்தினை தொடர்ந்தும் கொண்டு செல்ல முடியுமா?

❑ எவ்வித்திலாவது யுத்தத்தினை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கு அத்தியவசியமான கோட்பாடுகள் சில உள்ளன.

- பொருளாதார ரீதியிலான இயலுமை,
- மிகவும் வலிமையான யுத்த நோக்குடைய படையணியிருத்தல்,
- பாரிய அரசியில் விருப்பு இருத்தல்.

❑ சிறந்த பொருளாதார மட்டம் இருப்பதற்கான காரணம் கீழே உள்ள காரணிகளுக்காகும்.

அ. படையினை பராமரிப்பதற்கு
ஆ. ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு
இ. சிவில் மக்களின் பௌதீக தேவைகளை நிறைவேற்றுவதற்கு.

❑ 2002 டிசெம்பர் ஆகும் போது இந் நாட்டில் சயப் பெறுமதி கொண்ட பொருளாதார வளர்ச்சியே காணப்பட்டது.

❑ இரண்டு தசாப்த காலமாக மேற்கொள்ளப்பட்ட யுத்தினால் 2002 டிசெம்பர் ஆகும் போது இந் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ரூபா 75,000/- கடனாளியாக்கப்பட்டிருந்தார்.

❑ இவ்வாறான பலவீனமான பொருளாதாரத்துடன் யுத்தத்தினை மேற்கொண்டு சென்றால் நாம் எமது அழிவினை விரைவாக ஈட்டுவோமே தவிர பயனுள்ள எதனையும் பெற மாட்டோம்.

- யுத்தத்தினை மேற்கொள்தவற்கு தேவையான இரண்டாவது காரணியாக அமைவது யுத்த நோக்குடைய மரணத்திற்க அஞ்சாத உறுதிபூண்ட இராணுபப்படையாகும்.

- இவ் இயல்பினை அறிவதற்கான காரணியாக அமைந்தது யாதெனில் இராணுவத்தினை விடுத்துச் சென்ற இராணுவச் சிப்பாய்களின் எண்ணிக்கை அதிகரித்தமையாகும்.

- யாதாயினும் ஒரு இராணுவத்தின் சிப்பாய்கள் அதனை விட்டு செல்கின்றார்கள் எனில் யுத்த நோக்கம் அற்றதென்பது புலப்படும். மறு புறத்தில் இராணுவத்தினை விட்டு நீங்காதவர்கள் அதிகமாக இருப்பின் யுத்த நோக்கம் அதிகமாக உள்ளதனை காட்டும்.

- 2002 ஆண்டு முடிவில் இலங்கை இராணுவப் படையில் காணக்கூடிய அம்சம் யாதெனில் இராணுப் படையினை விடுத்து செல்லும் சிப்பாய்களின் வீதாசாரம் 100:30 ஆன உச்ச நிலையில் இருந்தமையாகும்.

- இதன் மூலம் புலப்படுவது என்ன? இரண்டு தசாப்தகாலமாக யுத்தத்திற்கு முகங்கொடுத்த எமது இராணுவம் களைத்துப் போய் நின்றது என்பதாகும்.

- பிரச்சினையாக இருப்பது என்னவெனில் இவ்வாறு களைத்த இராணுவத்துடன் தொடர்ந்தும் எவ்வாறு யுத்தம் புரிவது என்பதாகும்.

- மூன்றாவதாக யுத்தத்தில் வெற்றி கொள்வதற்கு அரசியல் பலத்தினை அமுலாக்கும் தலைமைத்துவத்தின் யுத்தம் தொடர்பான விருப்பு இருத்தல் வேண்டும் என்பதாகும்.

- அரசியல் தலைமைத்துவத்தின் யுத்தம் தொடர்பான அர்ப்பணிப்பு குறைவடைகின்ற போது இராணுவப்படையினது ஆர்வமும் குறைவடையும்.

- கடந்த இரண்டு தசாப்த காலமாக யுத்திற்கு அரசியற் தலைமைத்துவத்தினை வழங்கிய அனைவரதும் கருத்தாக அமைந்ததாவது, இனப் பிரச்சினைக்கு தீர்வு என்பது யுத்தமன்றி அரசியல் பேச்சுவார்த்தையே என்பதாகும்.

- ஆதலினால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் அரசாங்கத்தினை ஏற்கும் வேளையில் யுத்தினால் இனப் பிரச்சினையினை முடிவுக்கு கொண்டு வர முடியாது என்பது தெட்டத் தெளிவான விடயமாக அமைந்திருந்தது.

- இதற்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இரண்டாவது மாற்று வழிக் கொள்கையே முன்னிலையில் காணப்பட்டது. அதாவது கலந்துரையாடலின் மூலம் சுமூகமான தீர்வினை அடைதல் என்பதாகும்.

- அவர் *LTTE* அமைப்புடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான காரணம் அதுவாகும்.

- 2002 பெப்ரவரி 22ம் திகதி கைச்சாத்திட்ட அவ் உடன்படிக்கைக்கு இம் மாதம் 22ம் திகதிக்கு ஒரு வருடம் பூர்த்தி அடைகின்றது.

- கடந்த ஆண்டின் நாம் ஈட்டிக் கொண்டவைகள் எவை?

  1. யுத்த்திற்காக செலவிட்ட தேசிய வளங்களை சேமிக்க முடிந்தமை,

  2. நாடு முழுவதும் மனித படுகொலைகள் அற்ற, அரசியல் சீரழிவின்றிய சுமூகமான சூழலை பராமரிக்க முடிந்தமை,

  3. 20 ஆண்டு காலமாக காடுகளில் இருந்த *LTTE* அமைப்பினை பேச்சுவார்த்தைக்கு அழைத்து அரசியல் தீர்வினூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடிந்தமை,

  4. சர்வதேச நம்பிக்கையினை மீண்டும் ஈட்டிக் கொள்ள முடிந்தமை மற்றும் "இலங்கையினை மீண்டும் கட்டியெழுப்புவோம்" என்ற பிரதமரின் திட்டத்திற்கு சர்வதேச உதவி பெற்றுக் கொள்ள முடிந்தமை,

  5. பொருளாதாரத்தினை மீண்டும் அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்ல முடிந்தமை.

- மேற் குறிப்பிடப்பட்ட அனைத்தும் கடந்த 20 ஆண்டு காலமாக நாம் வாழ்ந்த இழிந்த, கடினமான, துயரமான சமூக வாழ்விலிருந்து மீண்டு சிவில் சமூதாயத்தில் பங்கேற்று சிறந்த பிரஜைகளாக வாழும் நிலையினைப் பெற்றிருந்தமை.

- பெப்ரவரி 22ம் திகதி நாம் அனைவரும் எமது மனச் சாட்சியிடம் கேட்க வேண்டிய ஒன்று உள்ளது.

- நாம் பின்னோக்கிச் செல்வதா? அல்லது முன்னேக்கிச் செல்வதா? வேறொரு விதத்தில் கூறினால் நாம் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுவதா? அல்லது சமாதானத்தின் வழியில் செல்வதா? என்பதாகும்.

- மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு யாரும் விரும்ப மாட்டார்கள். அது கடினமான பயணமாகும், அப் பாதையில் செல்லக்கூடியவர்கள் உணர்ச்சிகள், மூட நம்பிக்கைகளுடன் செல்ல முடியாது. அப் பாதையில் செல்லக் கூடியவர்கள் புத்தியுள்ள, தர்க்கமுள்ள உண்மையினை அடிப்படையாகக் கொண்டவர்களாவர்.

- சமாதானமானது இன்று அனைவருக்கும் தேவையானதொன்றாகும். அது தெற்கில் உள்ள மக்களுக்குப் போன்று வடக்கில் உள்ள பிரபாகரனை தலைவராகக் கொண்ட *LTTE* அமைப்பிற்கும் தேவையானதொன்றாகும். அது கௌரவ ஜனாதிபதிக்கும் கௌரவ பிரதமருக்கும் தேவையானதொன்றாகும். அது சர்வதேச சமுதாயத்திற்கும் தேவையானதாகும்.

- சமாதானம் தொடர்பான இந்த வேண்டுகோள் நாம் கைவிட முடியாது. அதற்கு எதிராக செயற்படல் அல்லது குழி தோன்றல் தேசத்துரோகமான செயலாகும்.

- என்றாலும் சமாதானப் பாதை எமக்குத் தடையானதொன்றல்ல. அது தும்பமும் துயரமும் மிகுந்த பாதையாகும்.

- சில நிகழ்வுகள் மனவேதனைக்கான காரணிகளாக அமையக்கூடும். சில சம்பவங்கள் எம்மை கோபங் கொள்ளச் செய்யலாம். என்றாலும் சமாதானப் பாதையில் செல்லும் நாம் இந் நிகழ்வுகள் அனைத்தும் பொறுத்திருத்தல் வேண்டும்.

- சமாதானத்தினை ஈட்டிக் கொள்ளும் முக்கிய உடன்படிக்கையாக அமைவது இரு சாராரும் நம்பிக்கையினை கட்டியெழுப்பிக் கொள்ளலாகும்.

- இதனை இரவோடிரவாகவோ, ஒரே நாளிலோ, அல்லது ஒரே மாதத்திலோ உடனடியாக மேற்கொள்ள முடியாது.

- இதற்கான அர்ப்பணிப்பும் பொறுமையும் செயற்திறனும் இருத்தல் அவசியம்.

- சமாதானம் தொடர்பான கொடுக்கல் வாங்கலானது "கொடுத்தல் மற்றும் வாங்கல்" *(Give and Take Theory)* எனும் கோட்பாட்டிற்கமைய நிகழல் வேண்டும்.

- நாம் நினைக்கின்ற அனைத்தும் எம்மால் ஈட்டு முடிவதில்லை. அதேபோன்று எதனையும் கொடுக்காமல் இருக்கவும் எமக்கு முடியாது. இது *LTTE* அமைப்புக்கும் பொத்தமானதாகும்.

- சில சந்தர்ப்பங்களில் கொடுக்கல் மற்றும் வாங்களுக்கடையே சமனின்மை நிலவக் கூடும்.

- எனினும் இறுதியில் எய்திக்கொள்ளக்கூடிய சமாதானமானது அவ் அனைத்தும் சமனின்மையிலிருந்து சமநிலைக்குக் கொண்டு வரும்.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்கள் மேற்கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் யுத்தம் வெற்றியற்று முடிவடைந்தன. ஜனாதிபதி பிரேமதாச அவர்களினதும் சமாதான முயற்சியும் யுத்தமும் வெற்றியின்றி முடிவடைந்தன. ஜனாதிபதி விஜேதுங்காவின் யுத்த முயற்சிகளும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சமாதான மற்றும் யுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின.

இவ்வாறான பின்னடைவுகள் பற்றி பலர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்க முடியும். என்றாலும் அது பிரச்சினைக்கான தீர்வாக மாட்டாது.

கடந்த ஒரு வருட காலமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அரசாங்கத் தரப்பினரினதும், எதிர் கட்சியினதும், ஜனாதிபதி அவர்களது உதவியுடனும் உலகத் தலைவர்களினதும் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடனும் முன் கொண்டு செல்லப்படும் இவ் சமாதான முயற்சி பல இன்னல்களுக்கு மத்தியிலும் சமாதானத்தினை விரும்புவோரது எதிர்பார்ப்புக்களை மேலும் வலுவாக்குகின்றன.

அனைத்து தடைகளையும் தாங்கி நாம் அனைவரும் எமது தாய் நாட்டின் நிரந்தர விடிவுக்காக சமாதானத்தினை வேண்டி நிற்போம்.

நன்றி.